# சந்தேக நிவாரணி
## ப்ரச்னோத்தர வாஹினி

மூலம்
பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்
**என்.கஸ்தூரி,** எம்.ஏ.பி.எல்

## 6. கர்மேந்திரியமும் ஞானேந்திரியமும்

**பக்தன் :** *இறைவா! நின் மலர்த்தாள் போற்றி !*

**சுவாமி :** *மங்கலம் உண்டாகட்டும்!*

**பக்தன் :** *தங்கள் கருணையினால் எல்லாம் மங்கலமே. தங்கள் அருள் இல்லையேல் அமங்கலந்தான்.*

**சுவாமி :** *நன்று. மங்கலம், அமங்கலம் என்னும் இவ் விரண்டும் இறைவனது அருளினை எவ்வாறு அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பதை நீ உணர்ந்து கொண்டாயா? அதே அருள்தான் மங்கலத்திற்கும் அமங்கலத்திற்கும் காரண மாகின்றதே அல்லாமல் வெவ்வேறு அல்ல. நல்லது. இது ஒருபுறம் இருக்கட்டும். சென்றமுறை நான் பாடிய அந்தக் கிராமியப் பாடலின் பொருளை உள்ளத்திலே நன்கு பதிய வைத்துக்கொண்டனையா? அது உன் இதயத்தில் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டுமே! இப்பொழுது உன்னிடம் வைராக்கியம் எந்த அளவில் உள்ளது.*

**பக்தன் :** *ஆ ! எல்லாம் பொம்மலாட்டக் காட்சியைப் போன்று காணப்படுகிறது. எனினும் இவ் வெண்ணம் சிற்சில சமயங்களில்தான் தோன்றுகிறது. மற்ற வேளைகளில் உள்ளம் இதனை மறந்து, முன் போல் மாயையான உலக வலையிலே சிக்கிக் கொள்ளுகிறது. இதில் மறைந்திருக்கும் பொருள்தான் என்ன சுவாமி?*

**சுவாமி :** *நல்லது. இந்த அறிவு பல்வேறுபட்ட செய்கை களினால் (விருத்தி) பாதிக்கப்படுகிறது. இயற்கை அறிவு (பிரகிருதி), உணர்ச்சி இவைகளின் சிறப்பான தன்மை (பற்றின்) இழுக்கும் வழியே அது எப்பொழுதும் செல்லுகிறது. இந்த குணம் அதற்கு இயற்கையாக அமைந்துள்ளது.*

**பக்தன் :** அதிகம் கூறுவானேன்? அதனைச் செந்நெறிக் கண் செலுத்த இயலாது. அவ்வாறாயின் நன்னிலை அடையும் நம்பிக்கை எங்கே இருக்கிறது? முடிவாக, அதனுடைய 'பற்றிலேயே' மூழ்கி தாழ்வடையத்தான் வேண்டுமோ?

**சுவாமி :** தாழ்வுற்று நசுங்க வேண்டிய அவசியம் இல்லை. கவலைப்படாதே! கரையேற வழியுண்டு மகனே ! அது, அதனுடைய இயற்கைக் குணமானாலும் அக்குணத்தை மாற்ற நமக்கு ஆற்றலுண்டு. நிலக்கரியின் இயற்கையான குணம் தன்னைச் சார்ந்த எப் பொருளையும் கருமையாக்குவது. ஆனால் அதுதான் முடிவானது என்ற முடிவிற்கு வந்துவிடாதே. தீயானது அந் நிலக்கரியைச் சார்ந்ததும் அதன் கருமை மறைந்து செந்நிறம் தோன்றுகிறது. அத்தன்மையே போல் உள்ளம் அறியாமை என்னும் மாயையில் சிக்குண்டு துன்பமுற்றாலும் இறைவன் அருளால் ஞானமென்னும் தீ உள் புகுமேயாகில், அதனுடைய இயல்பு மாறும்; இறைவனை ஆட்படுத்தும் "சாத்வீக" குணம் வந்தடையும்.

**பக்தன் :** இறைவ, "அந்த:கரணம்" என்று கூறுகின்றார் களே, அதன் பொருள் என்ன?

**சுவாமி :** இவ்வறிவினையும் அவ்வாறு குறிக்கின்றனர். "கரணம்" என்பது "இந்திரியம்" என்றும், "அந்த : கரணம்" என்பது உள் இந்திரியம் என்றும் பொருள்படும்.

**பக்தன் :** அவ்வாறாயின் அது அக இந்திரியம், புற இந்திரியம் என்ற இரண்டு பிரிவினை உடையதா?

**சுவாமி :** ஆம். உண்மைதான். புற இந்திரியங்களைக் கர்மேந்திரியம் என்றும் அக இந்திரியங்களை ஞானேந்திரியம் என்றும் கூறுவர்.

**பக்தன் :** சுவாமி, கர்மேந்திரியங்களும், ஞானேந்திரியங் களும் எவை எவை என்று விளக்கிக் கூறுங்கள்.

**சுவாமி :** நல்லது. செயலாற்றத் துணைபுரியும் உடலின் புறகருவிகளுக்குக் கர்மேந்திரியங்கள் என்று பெயர். அவை எண்ணிக்கையில் ஐந்தாகும். உடலின் அகத்தேயிருந்து ஞானம் பெற அவை துணைபுரியும். அக் கருவிகளை

ஞானேந்திரியங்கள் என்பர். அவற்றின் செயல்களாவன: கேட்டல், சுவைத்தல், பார்த்தல், நுகர்தல், உணர்தல். "தசேந்திரியம்" (10) என்றும் இந்தக் கர்மேந்திரியத்தையும், ஞானேந்திரியத்தையும் இணைத்துக் கூறுவர்.

**பக்தன் :** அவ்வாறானால், அவ்விரண்டின் செயல் என்ன? அவைகளின் செயலுக்கும் மனத்திற்கும் உள்ள (அறிவு) தொடர்பென்ன?

**சுவாமி :** அவை என்ன வினை புரியினும், மனம் அவைகளுடன் ஒன்றுபடாமற் போனால், எத்தகைய பயனையும் அடைய முடியாது. கர்மேந்திரியங்கள் இந்த உலகுக்கான செயல்களைச் செய்து ஞானம் அடைதல்; ஞானேந்திரியங்கள் நன்றென்றும், தீதென்றும் பாகுபடுத்தி அவற்றை ஆத்மாவுக்குத் தெரிவித்தல் ஆகிய தொழில்களை மனத்தின் மூலமாகச் செய்கின்றன. மனம் இல்லையேல் இவற்றை எவ்வாறு அறிவிக்க இயலும்! ஆற்றிலே வெள்ளம்; ஆற்றின் ஒரு கரையின் இருப்பவன் அதன் எதிர்க்கரைக்கு செல்ல வேண்டுமானால், ஒரு தெப்பமோ அல்லது படகோ அவனுக்கு வேண்டியதாகிறது. அவ்வாறே பிரகிருதியுடன் சம்பந்தப்பட்டுள்ள கர்மேந்திரியங்களும் ஞானேந் திரியங்களும் ஆத்மாவை அடைய வேண்டும் என்ற ஆவல் உண்டாயின், அப்பொழுது அவைகளுக்கு மனம் என்னும் படகு வேண்டியதாகிறது. படகைப் போல் உதவும் மனம் இல்லையேல் அவைகளால் ஒன்றும் செய்ய முடியாது.

**பக்தன் :** அவ்வாறாயின் தாங்கள் கூறிய புத்தி, சித்தம்; அகங்காரம் என்பவை எங்கும் வாழ்கின்றன அல்லவா?

**சுவாமி :** அவை இங்குதான் இருக்கின்றன. அந்தத் தசேந் திரியங்களில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான் கினையும் அக சதுஷ்டிய இந்திரியங்கள் அல்லது அக நான்கு என்று சிறப்பாக எடுத்துரைப்பர்.

**பக்தன் :** மிக நன்று. அவ்வாறு எனின் எல்லாம் ஒரே தன்மையில் இருக்கின்றன அல்லவா? உண்மையில் வாழ்க்கை விநோதமானது. சுவாமி, இந் நான்கும் ஆற்றும் செயல்தான் என்ன?

**சுவாமி :** மனம் கருத்தைக் கவர்கிறது. புத்தி அக்கருத்தின் நன்மை தீமைகளை ஆராய்கிறது. இவ் விரண்டினையும் அடிப் படையாகக் கொண்டு சித்தம் தெளிவடைகிறது. முடிவாக, அகங்காரம் அதனை உடந்தையாகவோ அல்லது எதிர்மாறாகவோ மாற்றுகிறது. பற்றின் காரணமாக ஞானத்தின் மீது கொண்டுள்ள உறுதியினையும் தளர்த்துகிறது. இவைதாம் அவை ஆற்றும் செயல்கள்.

**பக்தன் :** சுவாமி ! அறிய வேண்டும் என்ற ஆவலினால் வினவுகிறேன். தவறிருப்பின் மன்னியுங்கள். அவை இவ்வுடலில் எங்கும் வாழ்கின்றன ?

**சுவாமி :** வருந்தாதே, மகனே ! உன் ஐயத்தை நீக்கு வதில் எனக்கு மிக்க மகிழ்ச்சியே. மனம் கூடாரத்திலும், புத்தி நாக்கிலும், சித்தம் உந்தியிலும், அகங்காரம் இதயத்திலும் வாழ்கின்றன.

**பக்தன் :** ஆகா, என்னே விளக்கம் ! எனவே, புத்தியும் அகங்காரமும் மிகச் சிறப்பான இடங்களில் வாழ்கின்றன. இவ்வுலகத் துன்பங்களுக்கும் இவைதாம் முக்கிய காரணமாக உள்ளன. தாங்கள் கூறிய மெய்யறிவினைக் கொண்டு ஆராய்ந்து, அவ் விரண்டினையும் தூய்மைப் படுத்திக்கொண்டால் இவ்வுலகில் துன்பமே இராது அல்லவா?

**சுவாமி :** நீ உண்மையிலேயே பெரும் பற்றுடனேயே கவனிக்கிறாய். ஆம், அதுதான் நல்லது. முதற்கண் கவனிக்க வேண்டுவது, பேசும்பொழுது மிகமிகத் தூய்மையான சொற் களையே பயன்படுத்த வேண்டும். அது கைவரப் பெற்றால், புத்தி நேர்மையான வழியில் இயங்கும் என்பதற்கேற்ற அறிகுறி அமையும், அகங்காரத்தை அடக்கி வெற்றி கண்டால், இதயம் செம்மையுற்றுள்ளது என்பதற்குச் சான்று ஆகும். எனவே, இவ்விரண்டின் கண்ணும் மிக விழிப்பாக இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பின் ஏனைய இரண்டான மனமும், சித்தமும் நல்ல எண்ணங்களை (விருத்திகளை)த் தாமே உடையனவாக மாறும். அதன்பின் துன்பத்தினின்றும்

விடுபட முடியும், பிறகு, அவை உன்னிடம் ஒருபோதும் வாரரா!

**பக்தன் :** அவ்வாறாயின் அவைகளில், "நான்" என்பது எது? இவைகளை எல்லாம் அநுபவிப்பது எது?

**சுவாமி :** இப்பொழுதுதான் நாம் எடுத்துக்கொண்ட தலைப்பின் முக்கிய பகுதிக்கு வந்துள்ளோம். கவனிப்பாயாக! அவை இல்லையேல் நீ இல்லை. "இவ்வுடல் எனது" என்னும் எண்ணம் எவ்வளவு காலம் வாழ்கின்றதோ அவ்வளவு காலம் அவை வாழ்கின்றன. அவை செயல்களுடன் அல்லது விருத்தி களுடன் (மனவெழுச்சிகளுடன்) இணைந்து வாழ்கின்றன. "அது நீ" என்று கொண்ட மனோ விருத்தியினை ஆத்மா கவனிக்கிறது. இன்பமும் துன்பமும், இழப்பும் துக்கமும், நன்மையும் தீமையும் ஆகிய நிகழ்ச்சிகள் எல்லாம் இவ் வுடலுடன் கொண்ட சம்பந்தமே அல்லாது அவை உன்னுடையன அல்ல; உன்னுடையவைகளாக இருக்கவும் முடியாது. "நீ ஆத்மனாய் இருக்கிறாய்." இந்த உண்மையை நீ உணரும் வரையில் "நான் நீ" என்ற மயக்கத்திலே உறங்குகிறாய். அவ் வுறக்கத்திலே இன்பம் துன்பம், இழப்பு, துக்கம் ஆகிய கனவுகள் தோன்றுகின்றன. அக் கனவிலே நீ கண்ட பயம் துக்கம் எல்லாம் உறக்க நிலை வரை வாழ்கின்றன. விழிப்பு நிலை அடைந்ததும் அவை எல்லாம் மறைந்துவிடுகின்றன. அவ்வாறே "நான், எனது" என்னும் தவறான எண்ணங்களை விட்டெறிந்துவிட்டு ஞானம் அடைய எழுவாயானால் இவைகளெல்லாம் நீ அல்ல, நீ ஆத்மன் என்பதை உணர்வாய்.

**பக்தன் :** அவ்வாறானால், இந்த மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவையெல்லாம் யாருடைய நன்மையின் பொருட்டு செயல்படுகின்றன, சுவாமி ?

**சுவாமி :** எவருடைய நன்மைக்காகவும் அல்ல. அவை தமது இயல்பான செயல்களைச் செய்கின்றன. இத்தகைய கருமங்களில், இவ் வுடல் நினைவுடன் வாழும் ஜீவனாகிய நிழல் நடிக்கும் நாடகத்தை ஆன்மா கவனிக்கிறது.